1972 ஆகஸ்ட் 19]

(இ) ஆம் எனில், அவர்களுக்கு ஆகும் செலவை எந்த மாநில அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும்?

(உ) அங்குள்ள மற்றக் கைதிகள் இவர்களுக்காக வேறு ஜெயிலுக்கு மாற்றப்பட்டுள்ளார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) உள்நாட்டு பாதுகாவல் பராமரிப்புச் சட்டத்தின் கீழ் காவலில் வைக்கப்பட்டுள்ள 691 காப்பு சிறையாளர் மேற்கு வங்காள சிறைகளிலிருந்து கடலூர் மத்திய சிறைக்கு 3—1—72-ல் மாற்றப்பட்டனர்.

(இ) மேற்கு வங்காள மாநில அரசு மேற்படி கைதிகளுக்கான செலவை ஏற்றுக் கொள்ளும்.

(உ) ஆம்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்: கேள்வி கேட்ட பல மெம்பர்கள் வரவில்லை. ஒரே ஒரு உறுப்பினர், திரு. ஆறுமுகசாமி இருக்கிறார்.

State Industries Promotion Corporation (SIPCOT)

* 103. *Q*.—THIRU M. ARUMUGASWAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any evaluation of the industrial potential is being made by the State Industries Promotion Corporation (Sipcot) in this State; and

(*b*) if so, the details thereof?

மாநிலத் தொழில் மேம்பாட்டுக் கழகம்

திரு. எம். ஆறுமுகசாமி: மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினைக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில் மாநிலத் தொழில் மேம்பாட்டுக் கழகத்தினுல் தொழில் வளம் குறித்து மதிப்பீடு ஏதாவது செய்யப் பட்டு வருகிறதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) இம்மாநிலத்தில், குறிப்பாக பின்தங்கிய பகுதிகளில் மேம்படுத்தப்படுவதற்கான வாய்ப்புக் கூறுகளையுடைய நடுத்தர, பெரிய அளவு தொழில்களைக் கண்டறிந்து, அவற்றை மேம்படுத்துவது, மாநில தொழில் மேம்பாட்டுக் கழகத்தின் (State Industries Promotion Corporation of Tamil Nadu) முக்கிய பணிகளில் ஒன்றாகும். பின்வரும் தொழில்களுக்கான வாய்ப்புக்கூறு அறிக்கைகள் தயாரிப்பது கழகத்தின் ஆய்வில் தற்போது இருந்து வருகிறது:—

(1) கண்ணாடிப் பலகைகள்

(2) சாலிசிலிக் அமிலம்

(3) ரெக்டிபையர்கள்

(4) சர்பிட்டால்

(5) உலோகத் தாள்

(6) பாலிவினைல் அஸிடேட்

(7) மென் தகடுகள்

(8) பொது ஒளி விளக்குகளும், தண்டு விளக்குகளும்

திரு. எம். ஆறுமுகசாமி : தலைவர் அவர்களே, நடுத்தரத் தொழில்கள் எப்படிப் பிரிக்கப்படுகின்றன என்பதைப் பற்றி விளக்கம் தர முடியுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சிறு தொழில்கள் என்று ரூ. 7½ லட்சம் மூலதனம் உள்ளதைப் பிரிக்கிறோம். அதற்கு மேல் அதிமாக முதலீடு போகும்போது, பெரும் அளவுக்கு கோடிக் கணக்கில் போகும்போது, அவைகளை நாம் 'மேஜர் இண்டஸ்டிரீஸ்' என்றும், 'மீடியம் இண்டஸ்டிரீஸ்' என்றும் பிரிக்கிறோம். ஆனால் நம்முடைய விளக்கம் இந்தச் சிறு தொழில்களுக்கு மட்டும் 7½ லட்சம் ரூபாய் என்று விதி வகுத்திருக்கிறோம்.

Calcium Carbide Industry

x 104. *Q.*—THIRU S. VELLAPANDIAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there are any proposals under the consideration of the Government to locate any calcium carbide industry in this State; and

(*b*) if so, the details thereof?